# நற்கொடை.

## வேதவாக்கியம்ஆன்மாவைஇரட்சிக்கும்.

மனுஷரெல்லாரும் பாவஞ்செய்து நித்திய அழிவுக்கு ஏதுவாயிருக்கிறார்கள். நாம் இதை அத்தாட்சிப்படுத்தல் அவசியமல்ல. செய்யக்கூடாதென்று அறிந்தும் செய்யத் தகாதனதைச் செய்ததாக ஒவ்வொரு மனுஷனுடைய இருதயமுமே சாட்சி பகரும். பாவம் செய்கையிலே மாத்திரமல்ல, குணத்திலுமுண்டு. சிலவேளை பாவம் விசர்நாய்க் கடியினாலுண்டான வியாதியைப்போலிருக்கும். அது நெடுகலுந் தோற்றப்படாதிருந்தாலும் ஏதோ ஒரு தருணத்தில் சடுதியில் அதிகரித்துச் சீக்கிரத்தில் ஆளைக் கொல்லும். சிலர் சடுதியில் சோதனையில் அகப்பட்டுத் தங்கள் நடக்கை பழிந்துபோகும் வரைக்கும் பரிசுத்தரும் நல்லவர்களுமாய்க் காணப்படுகிறார்கள். வியாதி காணப்படாதிருந்தாலும் அங்கேயிருந்ததென்பதற்கு ஐயமில்லை. பாவ வியாதியின் அதிகுதி சிலரில் ஏற்றமுஞ் சிலரில் தாழ்ச்சியுமாக இருந்தாலும் மனுஷரெல்லாரிலும் இருக்கிறது. தங்கள் குணத்தை மாற்றி இத் துன்பத்தைச் சுகப்படுத்திக்கொள்ளாதிருந்தால் நிச்சயம் அழிந்தே போவார்கள். நரகத்தில் தள்ளி விடப்படுவார்கள். அங்கே குணத்தை மாற்றல் கூடவே கூடாது. பிற உதவியினாலேமாத்திரம் ஒருவனுடைய குணம் மாற்றப்படக் கூடும். நரகத்திலேயோ சகாயமில்லை. ஆகவே நரகவேதனைக்கு அவன் தப்பிப்போவதுமில்லை.

மனுஷனுக்கு வேண்டிய உதவி தேவன்தான். தேவன் ஏதுக்களைக்கொண்டு மாத்திரம் கிரியைசெய்கிறார். அவ்வேதுக்களில் ஒன்று வேதம். வேதம் ஒருவனுடைய குணத்தை மாற்றிப் பாவத்திலிருந்து அவனை மீட்டு நரகத்திலிருந்து அவனை இரட்சிக்கும்.

ஒருவன் தன்னுடைய பிள்ளை கிணற்றுள் விழுவதைக் காண்கிறான். கண்டு ஓடிப்போய்த் தன் கரங்களை நீட்டி

அந்தப் பிள்ளையைக் கிணற்றுள்ளிருந்து வெளியே எடுக்கி
றான். அப்படியே தேவனும், மனுஷன் பாவக் கடலில்
வீழ்ந்து அழிவதைக் கண்டு, அவனை இரட்சிக்கத் தமது
கரத்தை நீட்டினார். தேவனுடைய கரம் இயேசுக்கிறி
ஸ்துவே. (ஏசாயா. 59: 16.) அவர் தேவதன்மையுடை
யவராயிருந்தபடியால் அவர் செய்ததெல்லாம் தேவனு
டைய செய்கையாயிருந்தது. நாம் அவரிடத்தில் அன்
பாயிருப்போமானால் அவருடைய கட்டளைகளைக் கைக்
கொள்ள விரும்புவோம். இவ்விதமாய்ப் பாவம் நீங்கக்
குணப்படுவோம்.

வேதவாக்கியத்தில் அவரைப்பற்றி வாசிக்கிறோம். பூமி
யிலே அவதாரமெடுத்திருந்த காலத்தில் அவர் செய்தவ
ற்றின் சரித்திரம் நாலு சுவிசேஷங்களிலுஞ் சொல்லப்ப
ட்டிருக்கிறது. புதியேற்பாட்டின் எஞ்சிய பாகத்தில்
அவர் தமது இராச்சியத்தை ஸ்தாபிக்கவும் மனுஷரை
அதனிடத்துக்குக் கொண்டு வந்து இரட்சிக்கவும் செய்த
வைகளைப் பற்றி வாசிக்கிறோம். இதற்காக வழியை ஆய
த்தப்படுத்திய விதத்தைக் குறித்துப் பழையேற்பாட்டிற்
சொல்லியிருக்கிறது. ஆகவே வேத வாக்கியம் முழுவ
தும் மனுஷரை இரட்சிப்பதற்காகத் தேவனுடைய கிரி
யை நோக்கம் இவைகளின் வெளிப்படுத்தலாயிருக்கிற
து. ஒருவனுடைய பேச்சிலிருந்து அவனுடைய இருத
யம் விளங்குவது போலவே தேவனுடைய இருதயமும்
அவருடைய வாக்கிலிருந்து வெளியரங்கமாகும். வேத
வாக்கியம் தேவனை நமக்குத் தெளிவாய் வெளிப்படுத்தி
நம்மைத் தேவனிடத்தில் நடத்தி, அவரோடே நம்மை ஐ
க்கியப்படுத்தக்கூடிய படியினால் அது இரட்சிப்புக்கேது
வாக தேவனுடைய பெலனாயிருக்கிறது.

சிலர் தேவன் இரக்கமுள்ளவராகையால் நரகத்துக்கு
த் தங்களையனுப்பாரென்று சொல்லுகிறார்கள். ஆனால் அ
வர்கள் மனந்திரும்பாதிருந்தால் அவர்களுடைய இருதய
த்திலேயே அவர்களுக்கு நரகமிருக்கும், அவர்கள் மோ
ட்சத்துக்குப் போனாலும் அங்கேதானும் மனப்பாக்கிய
முடையோராயிருக்கமாட்டார்கள்.

சிலர் பிறவிகளினாலே பாவக்கட்டிலிருந்து விடுதலையா
வோமென்று சொல்லுகிறார்கள். பாவம் மனுஷனுடை

ய தன்மை. இத்தன்மை ஓரிடத்தை விட்டு இன்னோரிடத்துக்குப் போவதினால் மாறாதது போலவே ஆயிரம் பிறப்புகளினாலும் மாறவேமாட்டாது.

வேறுசிலர், தேவன் வல்லபமுடையவராதலால் அவர் விருப்பங்கொண்டால் தங்கள் குணாகுணங்களை மாற்றக்கூடுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் தேவன் ஏதுக்களை மாத்திரம் பாவிக்கிறாரென்று மேலே சொன்னோம். அவர் கொடுத்திருக்கிற அதியுத்தம ஏது அவருடைய வார்த்தையே. அவ் வார்த்தையில் தமது அன்பை விளங்கக் காண்பிக்கிறார். நேர்மையான மனதோடு அதைப் பார்ப்போமேயானால் அது நம்முடைய இருதயங்களில் அன்பை எழுப்பிவிடும். அவ் அன்பு நமது குணாகுணங்களை மாற்றி நம்முடைய பாவங்களை அகற்றும். ஆகையினால் ஒவ்வொருவனுந் தேவனுடைய வாக்கை ஏற்றுக்கொண்டு அதற்கிசையநடந்தால் அது அவனை இரட்சிக்கும்.

அது மிகவும் வல்லமையுள்ளது. ஒவ்வொருவனும் தன்னுடைய குணாகுணங்கள் அதில் விபரிக்கப்பட்டிருக்கிறதாகவும் தன்னுடைய மனச்சாட்சி தன்னை அதிகமதிகமாக ஊடறுக்க அது செய்கிறது என்றுங் காண்பான். பாவத்தை நீக்குவதினால் மனச்சாட்சியினால் உண்டான காயத்தையுஞ் சுகப்படுத்தும். வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி அவருடைய சித்தத்துக்கேற்றபிரகாரம் நாம் செய்தாற் சொல்லப்பட்டிருக்கிறவற்றின் உண்மையை நாம் அனுபவத்தினால் அறியலாமோ அல்லவோ என்று சோதித்துப் பார்க்கும்படி தேவன் கேட்கிறார். (யோவா. 7: 17.)

அது நம்முடைய் குணத்தை மாற்ற இயன்றதாயிருப்பது மாத்திரமல்ல, இருளான இடத்திலேயிருக்கும் விளக்கைப்போல நாம் செய்வதெல்லாவற்றிலும் நம்மை வழிநடத்தி மோட்சத்துக்குப்போகும்பாதையை நமக்குக்காண்பிக்கும். அது நம்முடைய ஆத்துமாவுக்குப் போசனமாகி நம்மைப் பலப்படுத்தும். நமது தாகம் யாவையும் சாந்தியாக்கி தெளி தேனிலும் அதிக மதுரமாயிருக்கும். அது நம்மை ஞானிகளும் நல்லவர்களுமாக்கிச் சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் நிறைந்திருக்கச் செய்யும். இவ் ஆசீர்வாதங்கள் யாவையும் வாக்கு

த்தத்தம்பண்ணுவது மாத்திரமல்ல, அத் தேவ பலமிருப்பதினால் அவைகளை நிறைவேற்றவுங் கூடும்.

வேதாகமம் மனுஷருடைய தன்மையை மாற்றுவதற்கான பலமுள்ளதென்பதற்கு அநேக திருஷ்டாந்தங்களுண்டு. பாசிபிக்சமுத்திர தீவுகளில் முற்காலங்களில் நரமாமிசபட்சணிகளாயிருந்தவர்கள் அநேகர் தற்காலஞ் சீர்திருந்தி அன்னியொன்னிய ஐக்கியமுள்ளவர்களாய்ச் சீவிக்கிறார்கள்.

ஒருவன் வேதத்திலுள்ள இயேசுவின் போதனைகளை அப்பியாசித்துவந்தால் நல்லவனாவான் என்பதை யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். அவைகளை அப்பியாசிக்கத் தங்களுக்குத் திறமையில்லையென்று சிலர் போக்குச்சொல்லுகிறார்கள். நம்மிலே நாம் இயன்றவர்களல்லவென்பது மெய்தான். தேவன் ஆவியாக நமது இருதயங்களிலே கிரியை செய்கிறார். நாம் அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டால் அவ்வார்த்தை நமது இருதயத்தைச் சீர்ப்படுத்தி அதற்கேற்க நாம்நடக்க உதவிசெய்யும். அது உண்மையோ அல்லவோ என்று சோதித்துப் பார்ப்போமாக. சுருதி, யுத்தி, அனுபவம், இவையாவுஞ் சொல்வதும் இதுவே.

**சுருதி.** வேதவாக்கியம் தான் தேவனுடைய வாக்காயிருப்பதினால் மனுஷர் தன் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று உரித்தோடு கேட்கின்றது. அதைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு பதில் நன்மைகளையும் வாக்குப்பண்ணுகின்றது.

**யுத்தி.** வேதாகமம் யுத்திக்கு விபரீதமாய்ப் பேசுகிறதில்லை. மனுஷர் எவ்வளவாய் ஞானத்திலே தேறுகிறார்களோ அவ்வளவாய் வேதத்திலே பதைத்திருக்கிற ஞானமும் ஆச்சரியமானதென்று காண்கிறார்கள். (சங். 139.6.)

**அனுபவம்.** வேதம் பாவத்தைச் செயிக்கும் வல்லமையுள்ளதென்று இலட்சக் கணக்கானோர் அனுபவசாட்சி கொடுத்திருக்கிறார்கள். நாமும் அதைப் பரிசோதித்துப்பார்த்தால் நம்முடைய பாவத்தையுஞ் செயிக்குமென்று காண்போம்.

---

Strong and Asbury, Printers: Manippay—1891. Ed. 3000.